NUS National University of Singapore
**Source:** *Tamil Murasu*, p3
**Date:** 23 June 2020

# $5 மில்லியன் மின்னிலக்க நிதித் தலைமைத்துவத் திட்டம்

நிதித் தொழில்நுட்ப, புத்தாக்க மையமாக சிங்கப்பூரின் நிலையை வலுப்படுத்துவதற்காக $5 மில்லியன் மதிப்பில் 'மின்னிலக்க நிதித் தலைமைத்துவத் திட்டம்' அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. தொழிலில் உன்னத நிலையை எட்டும் நோக்கில் மின்னிலக்க நிதித் தீர்வுகளிலும் சேவைகளிலும் தலைவர்களைப் பட்டைதீட்ட இந்தத் திட்டம் கைகொடுக்கும். 'எம்டிடி' குழுமம், ஸியாவ்மி ஃபைனான்ஸ், சிங்கப்பூர் நிர்வாகப் பல்கலைக்கழகம், சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழகத்தின் அமைப்பு அறிவியல் நிலையம் ஆகியவை இணைந்து இந்தத் திட்டத்தை முன்னெடுத்து உள்ளன.

Source: Tamil Murasu © Singapore Press Holdings Ltd. Permission required for reproduction.